Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 113 | உள்ளூர் - 23.04.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 113 | வெளியூர் - 24.04.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமி. 1055 காலியிடங்கள்!

உடல்நலத்துடன் தொடர்பான ஜோதிட பார்வை!


பிளஸ் 2 முடிவுகள் எப்போது?

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

# 8 பெண்களுக்கு மரண தண்டனையா...? டிரம்ப் கூறிய விசயங்களை மறுத்த ஈரான்!

வாஷிங்டன், ஏப். 23–

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28–ந்தேதி தாக்குதல் நடத்தியது. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8–ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது. அதற்கான காலக்கெடு முடிந்த நிலையில் போர் நிறுத்தம் மீண்டும் நீட்டிக்கப்படுகிறது என டிரம்ப் அறிவித்து உள்ளார். ஈரான், அமெரிக்கா இடை யே நிரந்தர போர் நிறுத்தத்தி ற்காக பாகிஸ்தானில் 21 மணிநேரம் நீடித்த தொடக்க கட்ட அமைதி பேச்சுவா ர்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகாமல், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில், 2–வது சுற்று அமைதி



பேச்சுவார்த்தை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனை உலக நாடுகள் எதிர்பார்த்து காத்திரு க்கின்றன. இந்த சூழலில், ஈரானில் தூக்கு த ண்டனையைஎதிர்கொள்ளும் பெண்களை விடுவிக்கும்படி டிரம்ப் கோரினார்.

சமூக ஊடக ஆவர்வலரான இயால் யகோபி வெளியிட்ட புகைப்படம் ஒன்றில், ஈரானிலுள்ள 8 பெண்கள் தூக்கு தண்டனையை எதிர்கொள்ள கூடிய சூழலில் உள்ளனர் என தெரிவித்து உள்ளார். அவர்களுடைய புகைப்படங்களையும் அவர் வெளியிட்டு உள்ளார்.

இதனை தன்னுடைய ட்ரூத் சோசியல் வலைதள த்தில் பகிர்ந்த டிரம்ப், என்னு டைய பிரதிநிதிகளுடன் விரைவில்பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ள ஈரானின் தலைவர்களே, இந்த பெண்களை விடுவியுங்கள். நான் உங்களை பெரிதும் பாராட்டுவேன்.

நீங்கள் விடுவித்த பின்னர், அந்த உண்மையை அவர்கள் மதிப்பார்கள் என நான் உறுதியாக கூறுகிறேன். தயவுசெய்து அவர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படுத்த வேண்டாம். அது நம்முடைய பேச்சுவார்த்தைக்கு மிக பெரிய தொடக்கம் ஆக அமையும். இந்த விவகார த்தில் கவனம் செலுத்தி யதற்காக நன்றி என பதிவிட்டு உள்ளார். இந்த நிலையில், ஈரான் நாட்டின் நீதி துறை வெளியிட்ட செய்தியில், டிரம்ப் மீண்டும் போலியான செய்திகளால் தவறாக வழிநடத்தப்பட்டு உள்ளார் என தன்னுடைய வலைத ளத்தில் தெரிவித்து உள்ளது. தூக்கு தண்டனை க்கு ஆளாகியுள்ள பெண்கள் என கூறப்படுபவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டு விட்டனர். சிலர் குற்றச்சாட்டு களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக தீர்ப்புகள் அளிக்கப்பட்டால், முடிவில் சிறை தண்டனை கிடைக்கும் என தெரிவித்து உள்ளது.

# நீங்கள் அளிக்கப் போவது வாக்கல்ல; தமிழ்நாட்டை காக்கும் கேடயம்: மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 23–

சென்னை தேனாம்பேட்டை எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் குடும்பத்துடன் சென்று வாக்களித்தார்.

அதன்பின்னர் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:– தமிழ்நாட்டின் வளர்ச்சி க்குத் தவறாது வாக்களியுங்கள்!.. 2026 சட்டமன்றத் தேர்தலிலில் எனது வாக்கினைச் செலுத்தி விட்டேன். தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள். இன்று நீங்கள் அளிக்கப் போவது வாக்கல்ல; தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம்.

உங்கள் வாக்குதான் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும். ஜனநாயகம் – மதச்சார்பின்மை – மாநில உரிமைகள் – சமத்துவம் – சமூகநீதி ஆகிய அரசியலமைப்பின் உயர்ந்த விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் உங்களின் வாக்கு அமையட்டும். தமிழ்நாடு வாக்களிக்கும்; தமிழ்நாடு வெல்லும்! வெல்வோம்_ ஒன்றாக!. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.






தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு நாளில் தலைமைத் தேர்தல் அதிகாரி/ அரசு முதன்மைச் செயலாளர் அர்ச்சனா பட்நாயக் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விருகம்பாக்கம் – தமிழ்நாடு அகில இந்திய சேவை வீட்டு வசதி சங்கம் (டாய்ஷா) வளாகத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

# மேற்கு வங்கம்: முற்பகல் 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகள் பதிவு!

கொல்கத்தா., ஏப். 23–

மேற்கு வங்கத்தில் இன்று முதல் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. 152 தொகுதிகளுக்கு நடைபெறும் இத்தேர்தலில் முற்பகல் 11 மணி நிலவரப்படி 41.11% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இவற்றுக்கு இன்றும், ஏப்ரல் 29–ம் தேதியும் இரு கட்டங்களாக தேர்தல் நடக்கின்றன. முதல்கட்டத்தில் 152 தொகுதிகளுக்கு தற்போது வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. இதில், மொத்தம் 1,478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3.60 கோடி பேர் வாக்குரிமை பெற்று உள்ள னர். மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். காலை 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகள் பதிவாகி உள்ளன. ஒரு சில தொகுதிகளில் பதற்றம் நிலவினாலும், பொதுவாக வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது. அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயகக் கடமைகளை ஆற்றி வருகிறார்கள். பெர்ஹாம்பூர் சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, லிபிகா நினைவு பெண்கள் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில்



தனது வாக்கினை செலுத்தினார்.

பாஜக மூத்த தலைவரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான சுவேந்து அதிகாரி, "நந்திகிராம் மற்றும் பபானிபூர் தொகுதியில் நிலைமை எவ்வாறு உள்ளது என்பது குறித்து நேரில் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுவேந்து அதிகாரி, சாமானிய மக்கள் அமைதியையே விரும்புகிறார்கள். அமைதியைக் குலைக்க முனையும் எவரையும் நாங்கள் விரட்டியடிப்போம்" என தெரிவித்தார். தேர்தலுக்கு முதல் நாளான நேற்று இரவு 8 மணி அளவில் முர்ஷிதாபாத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில், பெண் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவத்தை நேரில் பார்த்த பெண்மணி ஒருவர் கூறும்போது, "இந்த சம்பவம் இரவு 8 மணி முதல் 8.30 மணிக்குள் நடந்தது. இந்த சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார். பெட்ரோல் குண்டு வீச்சில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து எங்களால் உறுதியாகக் கூற முடியாது. நாங்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளோம். எந்த நேரத்திலும் மற்றொரு அசம்பாவிதம் நடக்கலாம். அரசியல் தலைவர்கள் இங்கு வந்தனர். அதன் காரணமாகவே இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

முர்ஷிதாபாத் பெட்ரோல் குண்டு வீச்சி சம்பவம் குறித்துப் பேசிய பாஜக தலைவர் திலீப் கோஷ், "முர்ஷிதாபாத் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாவட்டம். அங்கு ஒவ்வொரு விஷயத்திலும் முறைகேடுகள் மலிந்துள்ளன. நாட்டில் எத்தகைய நிகழ்வுகள் நடந்தாலும் அவை அனைத்தும் அங்கும் எதிரொலிக்கும்.

குடியுரிமை திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதும், வக்பு வாரிய மசோதா நிறைவேற்றப்பட்டபோதும் அங்கு கலவரங்கள் ஏற்பட்டன. எங்கள் கட்சி அலுவலகமும் கோயிலும் எரிக்கப்பட்டன. வங்கதேசத்தில் இருந்து பலர் இங்கு ஊடுருவியுள்ளனர். அவர்கள் இங்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு அமைதியைக் குலைக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆட்சி மாற்றம் நிகழும்போது அனைத்தும் முழுமையாக மாறிவிடும்" என தெரிவித்தார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்

# ஆர்வத்துடன் மக்கள்..! விறு விறு வாக்குப்பதிவு

## 4 மணி நேரத்தில் 37.56% வாக்குப்பதிவு..!





சென்னை, ஏப். 23–

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். மொத்தமாக 5 கோடியே 73 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும்..

இந்த சூழலில் இன்று காலை முதலே பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர்.. பொதுமக்கள் மட்டுமின்றி, அரசியல் தலைவர்கள், திரைப் பிரபலங்கள் என பல்வேறு தரப்பினரும் தங்கள் வாக்கினை பதிவு செய்து வருகின்றனர்..

தமிழ்நாட்டில் 4 மணி நேரத்தில் 37.56% வாக்குகள் பதிவாகி உள்ளன.. அதிகபட்சமாக திருப்பூர் மாவட்டத்தில் 42.45% வாக்குகள் பதிவாகி உள்ளது.. தமிழ்நாட்டில் குறைந்த பட்சமாக ராமநாதபுரத்தில் 34.02% வாக்குகள் பதிவாகி உள்ளது..

அரியலூர் : 36.11%
செங்கல்பட்டு : 37.17%
சென்னை : 35.47%
கோவை : 38.62%
கடலூர் : 36.30%
தருமபுரி : 38.28
திருப்பூர் : 42.45%
நாமக்கல் : 41.41%
ஈரோடு : 41.00%
சேலம் : 40.56%
கரூர் : 39.70%
நீலகிரி : 32.62%
ராமநாதபுரம் : 34.02%
திருநெல்வேலி : 34.05%
கன்னியாகுமரி : 32.16%
குமாரபாளையம் : 45.87%
திருப்பூர் தெற்கு : 44.21%
அவிநாசி : 43.95%
பல்லடம் : 43.76%
காங்கேயம் : 43.65%

# நைஜீரியா பயங்கரவாதிகள் தாக்குதல்; 11 பேர் பலி!

மைதுகுரி, ஏப். 23–

ஆப்பிரிக்காவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றான நைஜீரியாவின் வடகிழக்கே போர்னோ மாகாணத்தில் சம்பீசா வன பகுதியில் புபாகு என்ற பகுதியில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் சிலர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் சிக்கி 11 பேர் பலியாகி உள்ளனர். 2 பேர் காயமடைந்தனர். அவர்கள் 2 பேரும் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். அவர்கள் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இதுபற்றி கிராமத்தினர் கூறும்போது, உயிரிழந்தவர்களின் உடல்கள் நேற்று புதைக்கப்பட்டு உள்ளன. போகோ ஹரம் குழுவை சேர்ந்த பயங்கரவாதிகள் சிலர் துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் கிராமத்திற்குள் புகுந்து, மக்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். இதுபற்றி கிராமத்தினர் கூறும்போது, உயிரிழந்த வர்களின் உடல்கள் நேற்று புதைக்கப்பட்டு உள்ளன. போகோ ஹரம் குழுவை சேர்ந்த பயங்கரவாதிகள் சிலர் துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் கிராமத்திற்குள் புகுந்து, மக்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர்.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய லகுரவா அமைப்பு மற்றும் கடத்தல், பணய தொகை கேட்டு மிரட்டல், சட்டவிரோத சுரங்க பணிகளில் ஈடுபடுதல் ஆகியவற்றில் ஈடுபடும் கொள்ளை கும்பல்களின் தாக்கம் நைஜீரியாவில் அதிகரித்து காணப்படுகிறது என தகவல் தெரிவிக்கின்றது.

இதனால், அவர்கள் அடிக்கடி கிராமங்களுக்குள் புகுந்து துப்பாக்கி சூடு நடத்தி பொதுமக்களை தாக்கி வருகின்றனர்.

தலையங்கம் மதுரை மணி
வியாழக்கிழமை 23.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 10-ம் தேதி

## இந்தியா எதிர்கொள்ளும் உரச் சவால்களும், தீர்வுகளும்!

ஏப்ரல் 4 அன்று, இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் (IPL) 2.5 மில்லியன் டன் (mt) யூரியாவை இறக்குமதி செய்வதற்கான டெண்டரை வெளியிட்டது. ஏப்ரல் 15 அன்று திறக்கப்பட்ட இந்த டெண்டரில், 5.9 மில்லியன் டன்னுக்கும் அதிகமான சலுகைகள் வந்தன. இதில் குறைந்தபட்ச விலையாக மேற்கு கடற்கரைக்கு ஒரு டன்னுக்கு 935 டாலர் மற்றும் கிழக்கு இந்திய துறைமுகங்களுக்கு 959 டாலர் என நிர்ணயிக்கப்பட்டது.

இதனை பிப்ரவரி 18 அன்று ராஷ்டிரிய கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் (RCF) வெளியிட்ட டெண்டருடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போது மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரை விநியோகத்திற்கு முறையே 508 டாலர் மற்றும் 512 டாலர் மட்டுமே விலையாக இருந்தது.

இரண்டே மாதங்களில் விலை இருமடங்காக உயர்ந்திருப்பது, அமெரிக்கா–இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலால் ஏற்பட்ட விநியோக பாதிப்புகளையும், பிப்ரவரி 28 முதல் மிக முக்கியமான ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டிருப்பதையும் பிரதிபலிக்கிறது.

யூரியா மட்டுமல்ல, டிஏபி விலையும் உயர்ந்துள்ளது. போருக்கு முன்பு ஒரு டன் 720 டாலர் ஆக இருந்த டிஏபி விலை, தற்போது 925 டாலர் ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உரங்கள் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருட்களான சல்பர் மற்றும் அம்மோனியா விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது. ஒரு கால கட்டத்தில் 300 டாலர் ஆக இருந்த சல்பர், தற்போது 900 டாலர்–க்கு கீழே கிடைப்பதில்லை.

ஈரான் தாக்குதலுக்குப் பிறகு கத்தார் எனர்ஜி மற்றும் சவுதி அரேபியாவின் மாடன் ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் இந்தியா இப்போது இந்தோனேசியா மற்றும் மலேசியாவை நம்பி இருக்கிறது.

### காரிஃப் பருவத்தின் சவால்?

ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கும் போது காரிஃப் சாகுபடி தொடங்கும். காரிஃப் 2026–க்கு 19.4 மில்லியன் டன் யூரியா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த மாத தொடக்கத்தில் வெறும் 5.5 மில்லியன் டன் மட்டுமே கையிருப்பில் இருந்தது.

இந்தியா ஆண்டுதோறும் 39–40 மில்லியன் டன் யூரியாவைப் பயன்படுத்துகிறது. இதில் 30–31 மில்லியன் டன் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ளவை இறக்குமதி செய்யப்படுகின்றன. இதில் 40% ஓமன், கத்தார், சவுதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளிலிருந்து வருகிறது. போரினால் எல்என்ஜி விநியோகம் பாதிக்கப்பட்டதால், உள்நாட்டு உற்பத்தியும் சரிந்துள்ளது.

"காரிஃப் பருவத்தை எப்படியாவது கடந்துவிடலாம், ஆனால் அக்டோபர்–டிசம்பர் மாதங்களில் தொடங்கும் ரபி பருவத்தில்தான் உண்மையான நெருக்கடி ஏற்படும்" என்று தொழில்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### சவால்களை எதிர்கொள்ளும் வழிகள்?

தற்போதுள்ள நெருக்கடியை சமாளிக்க சில மாற்று வழிகள் முன்வைக்கப்படுகின்றன:

அம்மோனியா பற்றாக்குறை உள்ள சூழலில், டிஏபி–க்கு பதிலாக ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் (TSP) அல்லது மோனோ அம்மோனியம் பாஸ்பேட் (MAP) போன்ற மாற்று உரங்களை விவசாயிகள் பயன்படுத்தலாம்.

யூரியா அல்லது டிஏபி உடன் துத்தநாகம், இரும்பு, தாமிரம் போன்ற நுண்ணூட்டச்சத்துக்களை சேர்த்து விற்பனை செய்ய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கலாம். இது மகசூலை அதிகரிப்பதோடு, விவசாயிகள் தனியாக நுண்ணூட்டச்சத்துக்களை வாங்கும் செலவையும் குறைக்கும்.

பயோஸ்டிமுலண்ட்ஸ் (Biostimulants), பாக்டீரியா, பூஞ்சை மற்றும் கடல்பாசி சாறுகளில் இருந்து தயாரிக்கப்படும் இவை, மண்ணில் உள்ள சத்துக்களை செடிகள் எளிதாக உறிஞ்ச உதவுகின்றன. இது ரசாயன உரங்களின் தேவையைக் குறைக்க உதவும்.

புனேவைச் சேர்ந்த பயோபிரைம் அக்ரிசொல்யூஷன்ஸ் (BioPrime AgriSolutions) போன்ற நிறுவனங்கள், நுண்ணுயிரிகள் மூலம் உரங்களின் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகின்றன. இந்த நெருக்கடி காலம், இந்திய உரத்துறையை நவீன மற்றும் இயற்கை சார்ந்த தீர்வுகளை நோக்கி நகர்த்த ஒரு வாய்ப்பாகவும் அமையலாம்.

## பிளஸ்-2 முடிவுகள் எப்போது? - கல்வித்துறை வெளியிட்ட முக்கிய அறிவிப்பு!



சென்னை, ஏப். 23–

தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தின் கீழ் 2015–26 கல்வி ஆண்டிற்கான 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் கடந்த மார்ச் 2–ஆம் தேதி தொடங்கி மார்ச் 27–ஆம் தேதி வரை நடைபெற்றன. இந்தத் தேர்வுகளை எழுத மாநிலம் முழுவதும் சுமார் 7,99,692 மாணவ, மாணவிகள் விண்ணப்பித்திருந்தனர். தேர்வுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளைத் தேர்வுத் துறை உடனடியாகத் தொடங்கியது.

முதலில் ஏப்ரல் 9–ஆம் தேதி முதல் ஏப்ரல் 20–ஆம் தேதிக்குள் விடைத்தாள் திருத்தும் பணிகளை முடிக்க அரசுத் தேர்வுகள் இயக்ககம் திட்டமிட்டிருந்தது. இருப்பினும், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே, அதாவது மார்ச் 6–ஆம் தேதியன்றே 89 மையங்களில் விடைத்தாள் திருத்தும் பணிகள் தொடங்கப்பட்டன. ஏப்ரல் 20–ஆம் தேதிக்குள் இப்பணிகள் அனைத்தையும் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விடைத்தாள் திருத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதால், திட்டமிட்ட தேதியை விட முன்னதாகவே முடிவுகள் வெளியாகுமா என்ற எதிர்பார்ப்பு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே எழுந்துள்ளது.

தேர்வு முடிவுகள் வெளியீடு குறித்துப் பேசிய கல்வித் துறை அதிகாரி ஒருவர், 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளை மே மாதம் 8–ஆம் தேதி வெளியிடப் பள்ளி கல்வித்துறை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதேபோல், 11–ஆம் வகுப்பு அரியர் தேர்வு எழுதிய மாணவர்களுக்கான முடிவுகள் மே 20–ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மே மாதம் 4–ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ள நிலையில், முன்னதாக 12–ஆம் வகுப்பு முடிவுகளை வெளியிடுவது குறித்துத் தேர்வுத் துறை ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், தற்போதைய நிலவரப்படி மே 8–ஆம் தேதியே முடிவுகள் வெளியிடப்படும் என்றும், இதில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் கல்வித் துறை சார்பில் முறையாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வு முடிவுகள் வெளியானவுடன், மாணவர்கள் தங்களது பதிவு எண் மற்றும் பிறந்த தேதியைப்பயன்படுத்தி tnresults.nic.in மற்றும் dge.tn.gov.in ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களின் வாயிலாகத் தங்களின் மதிப்பெண்களை அறிந்து கொள்ளலாம்.

## ஆன்லைன் கேமிங் ஆணையம் அமைப்பு - மத்திய அரசு அரசாணை வெளியீடு!



புதுடெல்லி, ஏப். 23–

இந்தியாவில் ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்தவும், மேம்படுத்தவும் ஆன்லைன் கேமிங் ஆணையம் அமைக்கப்படும் என மத்திய அரசு இன்று அரசாணை வெளியிட்டுள்ளது. முன்னதாக கடந்த 2025–ம் ஆண்டு ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்தக்கூடிய சட்டத்தை நாடாளுமற்றத்தில் மத்திய அரசு நிறைவேற்றியது.

அந்த சட்டத்தின்படி இந்தியாவில் ஆன்லைன் சூதாட்டம் தடை செய்யப்பட்டிருக்கிறது. அந்த சட்டத்தின் அடிப்படையில் தற்போது 'ஆன்லைன் கேமிங் அத்தாரிட்டி ஆப் இந்தியா' என்ற ஆணையம் அமைக்கப்பட உள்ளது. ஆன்லைன் கேமிங் துறையில் நிலவும் சிக்கல்களை தீர்க்கவும் முறையான வழிகாட்டுதலை வழங்கவும் இந்த உயர்மட்ட ஆணையத்தை மத்திய அரசு அமைத்திருக்கிறது. இந்த ஆணையம் 6 முக்கியமான அதிகாரிகளை கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் உள்துறை அமைச்சகம், நிதி அமைச்சகம், தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகம், சட்ட அமைச்சகம் ஆகிய வற்றின் இணை செயலாளர்களும் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆன்லைன் விளையாட்டுகளில் நடைபெறக்கூடிய நிதி மோசடி, ஆன்லைன் சூதாட்டத்திற்கு அடிமையாதல் மற்றும் சட்டவிரோத சூதாட்டங்களை தடுப்பது இந்த ஆணையத்தின் மிக முக்கியமான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையத்தின் வருகை இந்தியாவில் உள்ள ஆன்லைன் கேமிங் நிறுவனங்களுக்கு புதிய விதிமுறைகளையும், பயனாளர்களுக்கு பாதுகாப்பான சூழலையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சமையல் எரிவாயு பற்றாக்குறை: பொதுநல மனுவை விசாரிக்க டெல்லி ஐகோர்ட்டு மறுப்பு!



புதுடெல்லி, ஏப். 23–

டெல்லி ஐகோர்ட்டில் ஒரு பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் "வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைக்காத காரணத்தால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கள்ளச்சந்தையில் ரூ.5 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. இது மத்திய அரசு தனது கடமையை நிறைவேற்றுவதில் தவறிவிட்டது என்பதையே காட்டுகிறது. சமையல் எரிவாயு ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும். இந்த சூழலை கண்காணிக்க ஒரு நீதித்துறை விசாரணை குழுவை அமைக்க வேண்டும்" என கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை விசாரிக்க மறுத்து ஐகோர்ட்டு வெளியிட்ட உத்தரவில் "சமையல் எரிவாயு வினியோகம் தொடர்பாக மத்திய அரசு ஏற்கனவே பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ள நிலையில், நாங்கள் பயனற்ற வழிகாட்டுதல்களை பிறப்பிக்க போவதில்லை. நாங்களா அரசை நடத்துகிறோம்? இது போன்ற விஷயங்களில் நாங்கள் தலையிடுவது இல்லை. இந்தியாவின் பொருளாதார கொள்கைகளை எங்களால் தீர்மானிக்க இயலாது" என கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மனுதாரர் அணுக அறிவுறுத்தி வழக்கை முடித்து வைத்தது.

## வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் செழிப்பிற்காக வாக்களியுங்கள்! - பியூஸ் கோயல்!



சென்னை, ஏப். 23–

தமிழக சட்டசபைக்கு ஒரே கட்டமாக இன்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. மத்திய மந்திரி பியூஸ் கோயல் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:–

இன்று தமிழ்நாட்டுக்கு தனது விதியை மாற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. தகுதி பெற்ற வாக்காளர்கள் அனைவரும் பெருமளவில் திரண்டு வந்து, தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கி றேன். ஒவ்வொரு வாக்கிற்கும் தமிழ்நாட்டின் பிரகாசமான மற்றும் மேம்பட்ட எதிர்காலத்தை உருவாக்கும் வலிமை உண்டு. உங்கள் வாக்கை மதிப்புமிக்க தாக்குங்கள்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விண்வெளிக்கு செல்லும் நுண்ணுயிரிகள் - சிலி நாட்டு விஞ்ஞானிகளின் புதிய ஆய்வு!




சாண்டியாகோ, ஏப். 23–

விண்வெளியின் கடுமையான சூழ்நிலைகளில் உயிரினங்கள் வாழ முடியுமா? என்பதை சோதிக்க சிலி நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, அண்டார்டிகா கண்டம் மற்றும் சிலி நாட்டின் அடகாமா பாலைவனத்தில் வசிக்கும் 6 வகையான நுண்ணுயிரிகளை விண்வெளிக்கு அனுப்ப ஆய்வாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

போலாரிஸ்(Polaris) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி ஆய்வு, டாக்டர் ஜெனி பிலெய்மி என்ற விஞ்ஞானியின் தலைமையில் நடைபெறுகிறது. இந்த திட்டத்தின்படி, பூமியில் இருந்து அனுப்பப்படும் நுண்ணுயிரிகள், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெளியே வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

அங்கு பிராண வாயு, புவியீர்ப்பு விசை இல்லாத சூழல், அதிக கதிர்வீச்சு மற்றும் வெப்பநிலையை இந்த நுண்ணுயிரிகள் எவ்வாறு எதிர்கொள்கின்றன? என்பது கண்காணிக்கப்பட உள்ளது. இந்த நுண்ணுயிரிகளை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்காக 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் 'பால்கன் 9' ராக்கெட் பயன்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.



## நவகிரகங்கள், ராசிகள், பாவங்கள்: உடல்நலத்துடன் தொடர்பான ஜோதிட பார்வை!



ஜோதிட சாஸ்திர பலன் கிரகங்கள் மற்றும் அதை அடிப்படையாக கொண்ட ராசிகளை குறிப்பிடக்கூடியதாக உள்ளன. இவற்றின் அமைப்பு உடல் நலம், உடல் உறுப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்களை குறிப்பிடக்கூடியன. குறிப்பாக நோய் என்பது 6ம் பாவம் (நோய் ஸ்தானம்), 8ம் பாவ (நீடித்த நோய்), 12ம் ஸ்தானம் மருத்துவ செலவு, சோர்வு ஆகியவை உடல் நல விஷயங்களை குறிப்பிடக்கூடியதாக பங்கு வகிக்கின்றன. உடல் நலனை நவகிரகங்கள் எப்படி கட்டுப்படுத்துகின்றன, ஒவ்வொரு கிரகத்திற்கும் உரிய உறுப்புகளும் அதற்குரிய நோய்கள் எப்படி உருவாஅகும் என சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளன.

சூரியன் தலை, இதயம், எலும்பு, இரத்தம்
சந்திரன் மனம், மார்பு, நீர்ச்சத்து, இடது கண்
செவ்வாய் இரத்தம், தசைகள், காயம், அழற்சி
புதன் நரம்புகள், தோல், சுவாசம், பேச்சு
குரு கல்லீரல், கொழுப்பு, தொடை, ஜீரணம்
சுக்கிரன் சிறுநீரகம், இனப்பெருக்க உறுப்புகள், சருமம்
சனி எலும்பு, முழங்கால், பற்கள், நரம்பு வலி
ராகு விஷம், கிருமி, திடீர் கோளாறுகள்
கேது தோல், நரம்பு, மறைநோய், திடீர் தாக்கங்கள்

உடல்நலத்தில் கவனிக்க வேண்டிய ஜோதிடச் சுட்டுகள்

உடல்நல பலனை மதிப்பிடும்போது, குறிப்பாக கீழ்கண்ட அம்சங்கள் முக்கியம்:

6ஆம் பாவம் நோய், எதிர்ப்பு சக்தி, உடல் சோர்வு
8ஆம் பாவம் நீடித்த நோய், மறைநோய், மீண்டும் வரும் கோளாறுகள்
12ஆம் பாவம் மருத்துவச் செலவு, மருத்துவமனை, தூக்கக் குறைவு
லக்னம் மற்றும் லக்னாதிபதி உடல் பலம், மீளும் திறன்
சூரியன் உயிர்சக்தி
சந்திரன் மனநிலை
சனி, ராகு, கேது நீடித்த, திடீர் அல்லது கண்டறிய கடினமான பிரச்சினைகள்

சிறிய பரிகார வழிகள்

கிரக பலவீனம் காரணமான உடல்நல சிக்கல்களுக்கு பாரம்பரிய ஜோதிடத்தில் சில பரிகாரங்கள் கூறப்படுகின்றன. அவற்றில்:

சூரியன் பலவீனமாக இருப்பின் சூரிய நமஸ்காரம், ஆதித்ய ஹ்ருதயம்
சந்திரன் பலவீனமாக இருப்பின் திங்கள் விரதம், அம்மன் வழிபாடு
செவ்வாய் பாதிப்பில் இருப்பின் முருகன் வழிபாடு
புதன் பலவீனமாக இருப்பின் விநாயகர் அர்ச்சனை
குரு பலம் அடைய வேண்டுமெனில் தட்சிணாமூர்த்தி, குரு வழிபாடு
சுக்கிரன் பாதிப்பில் இருந்தால் மகாலட்சுமி அருள்
சனி, ராகு, கேது பாதிப்பில் இருப்பின் சனீஸ்வர பகவான், சரபேஸ்வரர், நவகிரக வழிபாடு

உடல்நல பலன்கள்

ராசி அடிப்படையிலான உடல்நல பலன்கள் பொதுப் பார்வை மட்டுமே. ஒருவரின் சரியான உடல்நிலை முடிவு ஜன்ம லக்னம், சந்திர ராசி, 6ஆம் பாவம், 8ஆம் பாவம், தசா–புத்தி, கிரக சஞ்சாரம் ஆகியவற்றை வைத்து தனிப்பட்ட முறையில் கணிக்கப்பட வேண்டும். இருந்தாலும், இந்த ஆண்டு எந்த ராசிக்காரர்கள் எந்த உடல் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அறிய இந்த வழிகாட்டி உதவும்.

உடல்நலம் காக்கும் முதல் பரிகாரம் நேர்மையான வாழ்க்கை முறை, ஒழுங்கான உணவு, போதிய உறக்கம், அமைதியான மனநிலை.

**கள்ள ஓட்டு போடுவதாக புகார்:**

## சென்னை ஆழ்வார்பேட்டையில் பாஜக - திமுகவினர் இடையே தள்ளமுள்ளு!



சென்னை, ஏப் 23–

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. வாக்காளர்கள் தங்களது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயக கடமை ஆற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை மயிலாப்பூர் தொகுதி ஆழ்வார்பேட்டை புனித பிரான்சிஸ் பள்ளி அமைக்கப்பட்டுள்ள 13–வது வாக்குச்சாவடியில் அந்த தொகுதி வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் முன்னிலையில் பாஜக– திமுகவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அடையாள அட்டை இல்லாமல் கள்ள ஓட்டு போடுவதாக தமிழிசை குற்றம்சாட்டினார். இதற்கு திமுக முகவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை கலைந்து செல்ல வலியுறுத்தியதை அடுத்து அங்கிருந்து அவர்கள் கலைந்து சென்றனர். வாக்குச்சாவடிக்குள் இருந்த சந்தேக நபரை போலீசார் வெளியேற்றாத நிலையில் துணை ராணுவத்தினர் வெளியேற்றினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.




## செவ்வாழை vs மஞ்சள் வாழைப்பழம்: எதில் சத்து அதிகம்? தினமும் எதை சாப்பிடலாம்?



வாழைப்பழம் என்பது அனைவருக்கும் பிடித்தமான, எளிதில் கிடைக்கக்கூடிய ஒரு பழம். அன்றாட உணவில் வாழைப்பழம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. ஆனால், நாம் பொதுவாக சாப்பிடுவது மஞ்சள் நிற வாழைப்பழத்தைத்தான். சந்தைகளில் சில நேரங்களில் செவ்வாழையையும் பார்க்க முடியும். மஞ்சள் வாழைப்பழத்திற்கும் சிவப்பு வாழைப்பழத்திற்கும் சுவை, சத்துக்கள் மற்றும் ஆரோக்கிய நன்மைகளில் என்ன வித்தியாசம்? இவை இரண்டிலும் எதில் ஆரோக்கியம் அதிகம்? என்பது பலருக்கும் உள்ள சந்தேகம். இரண்டு வாழைப்பழங்களுக்கும் உள்ள முழுமையான ஒப்பீட்டை பற்றி தெரிந்து கொள்ள படியுங்கள்.

**சுவை மற்றும் தோற்றத்தில் உள்ள வேறுபாடுகள்;**

மஞ்சள் வாழைப்பழம் எளிதில் உரிக்கக்கூடிய மென்மையான தோலையும், இனிப்பான சுவையையும் கொண்டது. இது பழுக்க பழுக்க இதன் இனிப்பு சுவை அதிகரிக்கும். ஆனால், சிவப்பு வாழைப்பழத்தின் தோல் சற்று தடிமனாகவும், அடர் சிவப்பு அல்லது ஊதா நிறத்திலும் காணப்படும். இதன் சதைப்பகுதி லேசான இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். சுவையை பொறுத்தவரை, செவ்வாழை மஞ்சள் வாழைப்பழத்தை விட சற்று இனிப்பாகவும், மெல்லிய ராஸ்பெர்ரி பழத்தின் சுவையை கலந்தும் இருக்கும்.

**ஊட்டச்சத்து:**

இரண்டு வாழைப்பழங்களுமே உடலுக்கு தேவையான பல ஊட்டச்சத்துக்களை கொண்டுள்ளன. ஒரு நடுத்தர அளவிலான செவ்வாழையில் சுமார் 90 கலோரிகள், 21 கிராம் கார்போஹைட்ரேட், 1.3 கிராம் புரதம், 3 கிராம் நார்ச்சத்து மற்றும் 0.3 கிராம் கொழுப்பு உள்ளது. மஞ்சள் வாழைப்பழத்தில் இருக்கும் சத்துக்களை விட செவ்வாழையில் சில குறிப்பிட்ட சத்துக்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக செவ்வாழையில் வைட்டமின் சி, வைட்டமின் பி6 மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மஞ்சள் வாழைப்பழத்தை விட அதிகம் காணப்படுகின்றன. செவ்வாழையின் சிவப்பு நிறத்திற்கு காரணம் அதில் உள்ள ஆந்தோசயனின் மற்றும் பீட்டா கரோட்டின் ஆகும்.

**செவ்வாழையின் பிரத்யேக ஆரோக்கிய நன்மைகள்:**

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது: செவ்வாழையில் நிறைந்துள்ள வைட்டமின் சி மற்றும் பி6, உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த உதவுகின்றன. இது வெள்ளை இரத்த அணுக்களின் உற்பத்தியை அதிகரித்து, நோய்த்தொற்றுகளிலிருந்து உடலைப் பாதுகாக்கிறது.

இதய ஆரோக்கியம் மற்றும் ரத்த அழுத்தம்: செவ்வாழையில் பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் அதிக அளவில் உள்ளன. ஒரு செவ்வாழையில் உடலுக்கு தேவையான அன்றாட பொட்டாசியம் அளவில் 9% உள்ளது. இது ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கவும், இதய நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கவும் உதவுகிறது.

செரிமானத்தை மேம்படுத்துகிறது: இதில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து செரிமான பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது. ஒரு பழத்தில் சுமார் 3 முதல் 4 கிராம் வரை நார்ச்சத்து உள்ளது. மேலும், குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ப்ரீபயாடிக்குகளாகவும் செவ்வாழை செயல்படுகிறது.

ரத்த சோகையை தடுக்கிறது: ரத்த அணுக்களின் உற்பத்திக்குத் தேவையான இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் சி செவ்வாழையில் உள்ளன. அனிமியா எனப்படும் ரத்த சோகை உள்ளவர்கள் செவ்வாழையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

**மஞ்சள் வாழைப்பழத்தின் நன்மைகள்;**

மஞ்சள் வாழைப்பழம் உடலுக்கு உடனடி ஆற்றலை வழங்கக்கூடியது. விளையாட்டு வீரர்கள், உடற்பயிற்சி செய்பவர்களுக்கு இது ஒரு சிறந்த ப்ரீ–வொர்க்அவுட் உணவாகும். இதிலும் நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் நிறைந்துள்ளதால் செரிமானத்திற்கும், தசைப்பிடிப்புகளை தடுக்கவும் மிகவும் உதவுகிறது. இரண்டு வாழைப்பழங்களுமே ஆரோக்கியமானவைதான். ஆனால், ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் அடிப்படையில் மஞ்சள் வாழைப்பழத்தை விட செவ்வாழை ஒரு படி மேல் நிற்கிறது. நீரிழிவு நோயாளிகள் வாழைப்பழத்தை அளவாக எடுத்துக்கொள்வது நல்லது. செவ்வாழையில் உள்ள குறைந்த கிளைசெமிக் குறியீடு, ரத்தத்தில் சர்க்கரை அளவை வேகமாக உயர்த்தாது என்பதால், சர்க்கரை நோயாளிகளுக்கு இது ஒரு சிறந்த தேர்வாக அமையும். தினசரி உணவில் எந்த வாழைப்பழத்தை வேண்டுமானாலும் நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம். தினமும் காலை உணவோடு அல்லது உணவுக்கு இடைப்பட்ட நேரத்தில் ஒரு வாழைப்பழத்தை சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். விலை சற்று அதிகமாக இருந்தாலும், சத்துக்களை கருத்தில் கொண்டு செவ்வாழையை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களாவது உணவில் சேர்த்து கொள்வது சிறந்தது.

# வாக்குப்பதிவு நேரத்தை 2 மணி நேரம் நீட்டிக்க வேண்டும் - விஜய் கோரிக்கை!



சென்னை, ஏப். 23–

தவெக தலைவர் விஜய் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பான அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

பொருள்: அவசரத் தலையீடு தேவை. சென்னை மற்றும் பிற நகரங்களில் உள்ள பேருந்து நிலையங்களில் சிக்கித் தவிக்கும் ஆயிரக்கணக்கானோருக்காக அவசரப் பொது போக்குவரத்தை இயக்க வேண்டும். ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும், சுமூகமான வரிசை நிர்வாகத்தை உறுதி செய்யவும் வாக்குப்பதிவு நேரத்தை 2 மணி நேரம் நீட்டிக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய ஐயா,

முழுமையான போக்குவரத்து முடக்கம் குறித்து ஆழ்ந்த கவலையுடனும் சீற்றத்துடனும் உங்களுக்கு எழுதுகிறேன். சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பிற பெருநகரங்களிலும் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளை அடைய பேருந்துகளோ அல்லது மாற்றுப் பொதுப் போக்குவரத்தோ இல்லாமல் பேருந்து நிலையங்களில் சிக்கித் தவிக்கின்றனர்.

இது ஒரு சிறிய சிரமம் அல்ல – இது அரசின் திட்டமிட்ட தவறான திட்டமிடல் முயற்சியாக தெரிகிறது. போக்குவரத்துக் கழகம் மற்றும் நிர்வாகம், இந்திய அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட வாக்களிக்கும் அடிப்படை உரிமையின் மீதான ஒரு அப்பட்டமான தாக்குதலாகும்.

தேர்தல் நாளன்று சென்னையின் கோயம்பேடு, கிளாம்பாக்கம் மற்றும் மாதவரம் பேருந்து நிலையங்களிலும், மற்ற இடங்களில் உள்ள அதுபோன்ற முனையங்களிலும் காணப்படும் காட்சிகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. உலகம் முழுவதிலும் இருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் நகரங்களுக்குள்ளிருந்தும் பயணம் செய்த அல்லது தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முயன்ற ஆயிரக்கணக்கான குடிமக்கள், சாதாரண வாக்காளர்களுக்கு இணையான ஏற்பாடுகள் ஏதுமின்றி, தேர்தல் பணிக்காக பேருந்துகளும் வாகனங்களும் பெருமளவில் கையகப்படுத்தப்பட்டதால் உதவியற்ற நிலையில் விடப்பட்டுள்ளனர்.

இந்த ஒருங்கிணைந்த தோல்வியானது, வாக்காளர் தொகுதியின் ஒரு பெரும் பகுதியினரின் வாக்குரிமையை திறம்படப் பறிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது, அரசியலமைப்புச் சட்டத்தின் 324–வது பிரிவின் கீழ் தேர்தல் ஆணையம் நடத்தக் கடமைப்பட்டுள்ள சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களின் இதயத்தையே தாக்குகிறது. எனவே, மூன்று அவசரமான விஷயங்களில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் 1055 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: SECL சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட்

அறிவிப்பு எண்: SECL/HR/MP/Recruitment/2026/ 166

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 1055 சுரங்க சர்தார் T&S கிரேடு–C, உதவி ஃபோர்மேன் (மின்சாரம்) கிரேடு C, துணை சர்வேயர் T&S கிரேடு C (சுரங்கம்), பணியிடங்கள்

பணியிடத்தில்: பிலாஸ்பூர்


தொடங்கும் தேதி: 15.04.2026 காலை 10.00 மணி

கடைசி தேதி: 14.05.2026 இரவு 11.59 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://secl–cil.in/

# வருமான வரித்துறை சோதனை நடத்தியது உண்மைதான்; 24-ந்தேதி ஆதாரங்களை வெளியிடுவேன் - செல்வப்பெருந்தகை!



சென்னை, ஏப். 23–

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கடந்த 20–ந்தேதி தமிழகத்திற்கு வருகை தந்து பிரசாரம் மேற்கொண்டார். ஆனால் அன்றைய தினம் ராகுல் காந்தியை காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை சந்திக்காதது பேசுபொருளானது. இதனிடையே, தனக்கு சொந்தமான இடத்தில் வருமான வரித்துறை சோதனை நடைபெற்றதாக செல்வப்பெருந்தகை கூறியிருந்தார். ஆனால், வருமான வரித்துறை தரப்பில் அவ்வாறு சோதனை எதுவும் நடத்தப்படவில்லை என கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சோதனை நடத்தப்பட்டது உண்மைதான் என செல்வப்பெருந்தகை விளக்கமளித்துள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது;–

"வருமான வரித்துறை சோதனை விவகாரத்தில் என்ன நடந்தது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துவது என் கடமை. நான் தங்கியிருந்த இடம், அலுவலகங்களில் திடீர் சோதனை நடைபெற்றது உண்மைதான்.

கடந்த 20–ந்தேதி ராகுல் காந்தி தமிழகம் வந்த நிலையில், என்னை முடக்குவதற்காக திட்டமிட்டு சோதனை நடத்தப்பட்டது. நான் தங்கியிருந்த இடம், அலுவலகத்தில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது.

நியாயம், ஜனநாயகம் மீதுள்ள நம்பிக்கையுடன் உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் உறுதியாக உள்ளேன். சம்பவம் தொடர்பான ஆதாரங்களை ஏப்ரல் 24–ந்தேதி காலை 11 மணிக்கு சென்னையில் வெளியிடுவேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆந்திர முன்னாள் முதல்-மந்திரி என்.பாஸ்கர ராவ் காலமானார்!



அமராவதி, ஏப். 23–

ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தின் முதல்–மந்திரியாக பணியாற்றிய என்.பாஸ்கர ராவ், தனது 90வது வயதில் காலமானார். வயது முதிர்வு தொடர்பான உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக ஐதராபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று உயிரிழந்தார்.

ஆந்திரப்பிரதேச அரசியலில் என்.பாஸ்கர ராவ் பற்றி ஒரு பெரிய வரலாறு உண்டு. தெலுங்கு தேசம் கட்சியின் உருவாக்கத்தில், மறைந்த முன்னாள் முதல்–மந்திரி என்.டி. ராமராவுக்கு நெருங்கிய துணையாக இருந்து, கட்சியின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினார்.

தெலுங்கு தேசக் கட்சியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான என்.பாஸ்கர ராவ், 1984–ல் ஒரு மாதம் மட்டுமே முதல்–மந்திரியாக பணியாற்றினார். மாநில வரலாற்றில் மிகக் குறுகிய காலம் (1984 ஆகஸ்ட் 16 – செப்டம்பர் 16) முதல்–மந்திரி பதவி வகித்தவர் என்ற பெருமையை பெற்றவர். இவரது இறுதிச் சடங்கு, ஐதராபாத்தில் உள்ள பஞ்சகுட்டாவில் வியாழக்கிழமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாங்குநேரியில் பெரும்பத்து கிராமத்தில் தேர்தல் புறக்கணிப்பு!

நாங்குநேரி, ஏப். 23–

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. நெல்லை மாவட்டம் முழுவதும் 1,680 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவையனைத்திலும் மக்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது வாக்கினை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெரும்பத்து கிராமத்தில் உள்ள 290–வது வாக்குச்சாவடியில் 969 வாக்காளர்கள் அனைவரும் ஓட்டுப்போட செல்லாமல் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். 4 மணி நேரமாகியும் மக்கள் வாக்களிக்க செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர். இதனால் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்படுகிறது. கடந்த மார்ச் 2–ம் தேதி நடைபெற்ற இரட்டை கொலை சம்பவத்தில் நீதி கிடைக்கவில்லை எனக்கூறி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.

# கடன் வலையில் சிக்கும் இளைய தலைமுறை - 5 ஆண்டுகளில் 65 சதவீதம் அதிகரிப்பு!




புதுடெல்லி, ஏப். 23–

'ஜென் இசட்' தலைமுறை என்று சமீப காலங்களில் அழைக்கப்படும் இளம் தலைமுறையினர். சேமிப்பை விட கடன் வாங்குவதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். அதை வாழ்க்கை முறை கருவியாக ஏற்றுக் கொண்டு இருப்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பிரபல கிரெடிட் ப்யூரோவான சி.ஆர். ஐ.எப்.ஐ.மார்க் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவின் மொத்த கடன் வாங்குபவர்களில் நான்கில் ஒரு பங்கினர், அதாவது 23 சதவீதம் பேர் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் ஆவர். கடந்த 2021–ம் ஆண்டில் + கோடியாக இருந்த இவர்களின் எண்ணிக்கை, 2025–ல் 6.6 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த 5 ஆண்டுகளில் 65 சதவீத வளர்ச்சியாகும்.

அதேபோல், புதிய கடன்களைப் பெறுவதில் இளைஞர்களே முன்னிலையில் உள்ளனர். 2025–ம் ஆண்டில் பெறப்பட்ட புதிய கடன்களில் 53 சதவீதம் 30 வயதிற்குட்பட்டவர்களால் வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர்கள் வாங்கும் கடன்களில் பெரும்பாலானவை எவ்வித அடமானமும் இல்லாதவை. அவர்கள் வாங்கும் கடன்களில் 29.3 சதவீதம் தனிநபர் கடன், 23.2 சதவீதம் நுகர்வோர் பொருட்கள் கடன். 15.5 சதவீதம் கிரெடிட் கடன் ஆகியவற்றை வாங்கி உள்ளனர். ஆனால் எதிர்கால சொத்தாகக் கருதப்படும் வீட்டுக் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை இளைஞர்களிடையே வெறும் 0.9 சதவீதமாக மட்டுமே உள்ளது. 2021–ம் ஆண்டு முதல் 2025–ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், இளைஞர்களின் மொத்த கடன் மதிப்பு 102 சதவீதம் அதிகரித்துள்ளது. இது மூத்த தலைமுறையினரின் கடன் வளர்ச்சியை 98 சதவீதம் விட அதிகமாகும். குறிப்பாக சிறிய அளவிலான கடன்களைப் பலமுறை வாங்கும் பழக்கம் இளைஞர்களிடம் அதிகரித்துள்ளது.

ஒரு இளைஞரின் சராசரி கடன் தொகை ரூ.2.7 லட்சமாக இருக்கும் வேளையில், அவர் சராசரியாக 2.4 முறை கடன் பெறுகிறார். இருப்பினும், இந்தத் தலைமுறையினர் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அதிக சிரமத்தை எதிர்கொள்கின்றனர். 31 முதல் 90 நாட்கள் வரை தவணை செலுத்தத் தவறுபவர்களின் விகிதம் இளைஞர்களிடையே 2.7 சதவீதமாக உள்ளது. இது மூத்த கடனாளிகளை விட 2.2 சதவீதம் அதிகம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



பழனி லட்சுமி நாராயண பெருமாள் கோவிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு கொடியேற்றப்பட்டது. இதில் கோயில் உதவி ஆணையர் செந்தில்குமார், ஸ்ரீ கந்த விலாஸ் அதிபர் என்.செல்வகுமார், கோயில் கண்காணிப்பாளர் அழகர்சாமி, பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரியநாயகி அறக்கட்டளை சுந்தரம், முன்னாள் கோயில் சூப்பிரண்டு முருகேசன், முருகன் சா மில் காலிங்கராயன், மருதுசாமி, கோயில் குருக்கள் கார்த்தி பாலாஜி ஆகியோர் பங்கேற்றனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மா.மதிவேந்தன் வரிசையில் நின்று தனது ஜனநாயக கடமையை ஆற்றினார் . தமிழகத்தில் 200 தொகுதிக்கு மேல் திமுக வெற்றி பெறும் என்றும் ராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் 25 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் நான் வெற்றி பெறுவேன் என பேட்டி . நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதி யில் காலை ஏழு மணி முதலே விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில், ராசிபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தன் மனைவியுடன் வந்து வரிசையில் நின்று ஜனநாயக கடமையை ஆற்றினார் .



திண்டுக்கல், M.V.M. கல்லூரி வாக்குச்சாவடியில் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி அதிமுக V.P.B.பரமசிவம் அதிமுக முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் கொடுத்த அம்பாசிடர் காரில் வந்து வாக்களித்தார்.



கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் (மதுரை) / மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார்கள்.



அதிமுக நிறுவனர், முன்னாள் முதல்வருமான எம்ஜிஆர் கொடுத்த அம்பாசிடர் காரில் வாக்களிக்க வந்த வேடசந்தூர் தொகுதி அதிமுக வேட்பாளர் வி பி பி பரமசிவம்.

## சினிமா துளிகள்..!

### ஆட்சி மாற்றம் வேண்டாம் என அஜித் கூறினாரா? - மேலாளர் விளக்கம்!



தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று தொடங்கியது. 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் கட்சி என நான்கு முனை போட்டி நிலவுகிறது.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு தொடங்கியது முதல் வரிசையில் நின்று மக்கள் ஆர்வமாக தங்கள் ஜனநாயக கடமையாற்றினர்.

திருவான்மியூரில் உள்ள வாக்குச்சாவடியில் முதல் நபராக நடிகர் அஜித் சுமார் வாக்கு செலுத்தினார். அப்போது 'No Need' என அஜித்குமார் கூறியதாக தகவல் பரவியது.

இந்நிலையில் இதுதொடர்பாக அஜித் குமார் மேலாளர் சுரேஷ் சந்திரா விளக்கம் அளித்தார். நடிகர் அஜித் குமார் ஆட்சி மாற்றம் தேவையில்லை என்று கூறியதாக பரவி வரும் தகவல் தவறானது. அவர் அப்படி எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

## ஜனநாயக கடமையை ஆற்றிய அரசியல் கட்சி பிரபலங்கள்!





## வாக்கு செலுத்த ஊருக்கு செல்ல முடியாமல் தவிக்கும் பயணிகள்!

சென்னை, ஏப். 23–

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் இன்று ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறுவதையொட்டி வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்திருந்தது. சிறப்பு தீவிர திருத்தத்திற்கு பிறகு தமிழ்நாட்டில் 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்கள் உள்ள நிலையில், 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் சேர்த்து 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், வாக்குப்பதிவு இயந்திரங்களில் முதல்முறையாக வேட்பாளர்களின் வண்ண புகைப்படம் பொருத்தப்பட்டுள்ளது. வாக்காளர் அட்டை, ஆதார் கார்டு, பான் கார்டு, லைசன்ஸ் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை வாக்குச்சாவடி அதிகாரியிடம் காட்டி வாக்காளர்கள் வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் போலீசார் மற்றும் 300 கம்பெனி துணை ராணுவப்படையினர்



ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். தமிழக தேர்தல் பணிகளை கண்காணிக்க 136 பொது பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு வாக்குச்சாவடிகளுக்கு உள்ளேயும், வெளியேயும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இன்று மாலை வாக்குப்பதிவு முடிந்த பிறகு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வி.வி. பேட்கள் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும்.

சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வரும்நிலையில், சென்னையிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு வாக்களிக்க புறப்பட்டுச் சென்ற மக்கள் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

தேர்தலை முன்னிட்டு சென்னையிலிருந்து வழக்கமாக இயங்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் 6,234 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்றும், மேலும் ஏப்ரல் 21ம் தேதி முதல் ஏப்ரல் 23ம் தேதி பிற்பகல் வரைக்கும் மொத்தமாக 11,323 பேருந்துகள் இயக்கப்படும் என்றும் போக்குவரத்துத்துறை தரப்பில் கூறப்பட்டிருந்தது. ஆனால், சென்னையின் முக்கிய பேருந்து நிலையங்களான கிளாம்பாக்கம், மாதவரம், கோயம்பேடு பேருந்து நிலையங்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கும் முறையான போக்குவரத்து வசதி இல்லாததால் மக்கள் நள்ளிரவில் கடும் அவதியடைந்ததாக கூறப்படுகிறது.

பேருந்துகள் கிடைக்காததால் நள்ளிரவிலேயே மக்கள் பேருந்து நிலையத்திலேயே அமர்ந்து போராடும் சம்பவமும் நிகழ்ந்தது. குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் அதிகளவில் பேருந்து கிடைக்காமல் அவதிக்குள்ளாகினர்.

பேருந்து கிடைத்து பயணத்தை தொடங்கியவர்களும் கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்கினர். அவர்கள் தாம்பரத்தை தாண்டவே பல மணி நேரங்கள் பிடித்திருக்கிறது. இரவு பேருந்து ஏறி காலையில் சொந்த ஊருக்கு சென்று வாக்களிக்கலாம் என திட்டமிட்டிருந்த பயணிகளும் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

நேற்று இரவு சென்னையிலிருந்து கிளம்பியவர்கள் காலை வரைக்குமே திண்டிவனம், விழுப்புரம் வரைக்கும்தான் சென்றிருக்கின்றனர். இதனால் திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில் போன்ற ஊர்களை சேர்ந்த பயணிகள் வாக்குப்பதிவு முடிவதற்குள்ளாவது ஊருக்கு சென்று சேருவோமா.. இல்லையா..? என சமூகவலைதளங்களில் கவலையோடு பதிவிட்டு வருகின்றனர்.

100 சதவீத வாக்குப்பதிவை எட்ட வேண்டும் என தேர்தல் ஆணையம் விளம்பரம் செய்து வரும் நிலையில், வாக்கு செலுத்த ஊருக்கு செல்ல முடியாமல் பயணிகள் பலர் தவித்து வரும் சூழல் நிலவி வருகிறது.

## வாக்காளர்களைத் தமிழில் பேசி பூ கொடுத்து வரவேற்ற ரோபோ!



வேலூர், ஏப். 23–

குடியாத்தத்தில் வாக்காளர்களைத் தமிழில் பேசி ரோஜா பூ கொடுத்து வரவேற்ற பெண் ரோபோவை வாக்காளர்கள் வியப்புடன் கண்டு ரசித்தனர்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் 2026 தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்குத் தொடங்கி தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயகக் கடமையைச் செய்து வருகின்றனர். மேலும் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குச் சக்கர நாற்காலி வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இதனிடையே குடியாத்தம் நகராட்சி பள்ளியில் பிங்க் வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் புடவை அணிந்த பெண் ரோபோ கையில் ரோஜா பூக்களுடன் வாக்களிக்க வந்த வாக்காளர்களைத் தமிழில் பேசி வரவேற்றது. வாக்களிக்க வந்த வாக்காளர்கள் ரோபோவை ஆச்சரியத்துடன் கண்டு வியந்தனர்.

## மனைவி குஷ்புவுடன் சென்று வாக்களித்த சுந்தர்.சி



சென்னை, ஏப். 23–

சென்னை மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ ராஜலட்சுமி பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், இயக்குநரும் நடிகருமான சுந்தர் சி, அவரது மனைவி நடிகை குஷ்பு மற்றும் அவர்களின் மகளுடன் வரிசையில் நின்று தங்களது வாக்கினை பதிவு செய்தனர். பொதுமக்களுடன் இணைந்து அமைதியாக காத்திருந்து வாக்களித்த இந்த தம்பதியினர், அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

## வாக்களிப்பதை வீடியோ எடுத்து ரீல்ஸ் போட்ட தவெகவை சேர்ந்தவர் கைது!

திருப்பத்தூர், ஏப். 23–

திருப்பத்தூர் தொகுதியில் விசில் சின்னத்திற்கு வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்ட தவெகவைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாருக்கு ஓட்டு போட்டோம் என்பதை இணையதளத்தில் வெளியிட்டால் சிறை தண்டனை விதிக்கப்படும் என தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், வாக்குச்சாவடிக்குள் அவர் வீடியோ எடுப்பதை சிசிடிவி மூலம் அதிகாரிகள் உறுதி செய்ததை அடுத்து அவரை போலீசார் கைது செய்துள்ளனர்.



திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் சொந்த ஊரான கட்டச்சின்னாம்பட்டி அருகில் உள்ள இராமலிங்கம்பட்டி வாக்குசாவடியில் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.



புதுக்கோட்டை கீழ 3 ஆம் வீதியில் உள்ள ராணியார் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் திருமயம் தொகுதி வேட்பாளர் அமைச்சர் ரகுபதி தனது வாக்கை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்...



திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி டட்லி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் சரவணன் தனது குடும்பத்துடன் வந்து தனது வாக்கினை பதிவு செய்தார்.



இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, "தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 தொடர்பாக, 180–புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தைலாநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் வாக்குப்பதிவு நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா நேரில் பார்வையிட்டார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020